**1980 ஆம் ஆண்டின் 33ஆம் இலக்க, பீடைகொல்லிகளைக் கட்டுப்படுத்தல் சட்டம்**

**11 ஆம் பிரிவின் கீழான கட்டளை**

1980 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க, பீடைகொல்லிகளைக் கட்டுப்படுத்தற் சட்டத்தின் 11 ஆம் பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக்கொண்டு, பீடைகொல்லிகள் பதிவாளராகிய ஜயகொடி ஆரச்சிலாகே சுமித் ஆகிய நான், பொதுமக்களின் நன்மைக்காகவும் மற்றும் பீடைகொல்லிகள் தொழில்நுட்ப ஆலோசனைக்குழுவின் மதியுரையின் மீதும் மேற்சொல்லப்பட்ட சட்டத்தின் 11 ஆம் பிரிவின் கீழ் ஆக்கப்பட்டு, 2014 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 21 ஆம் திகதி 1854/47 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட கட்டளையை, அக்கட்டளைக்கான அட்டவணையை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வரும் அட்டவணையை இடுவதன் மூலம் இக்கட்டளையால் திருத்துகின்றேன்.

**"அட்டவணை**

| **செயற்பாட்டு மூலகம்** | **சுருக்கச் சேவை பதிவு இலக்கம்** |
|---|---|
| எலெக்லோர் | 15972-60-8 |
| பெரகொட் | 4685-14-7 |
| டைமெதொஏட் | 60-51-5 |
| பென்தியொன் | 55-38-9 |

கலாநிதி ஜே.ஏ. சுமித்,
பீடைகொல்லிகள் பதிவாளர்.

பேராதனை,
2018, செப்தம்பர் 10.

draft texts